செ.கு.எண் 370 நாள் 19.10.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.10.2012

கோயம்புத்தூர் மாநகர ஆயுதப்படைப் பிரிவில் வாத்திய இசைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.அசோக்குமார் அவர்கள், சென்னை ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் படைக்கள மையத்தில் வாத்திய பயிற்சிக்காக வந்திருந்த போது 17.10.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்ட மதுவிலக்கு அமல்பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. J.மோகன் அவர்கள் 13.10.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் பணி நிமித்தமாக சென்று கொண்டிருந்த போது, நிலைதடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.10.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆயுதப் படை வாத்திய இசைக் காவலர் திரு. அசோக்குமார் மற்றும் மதுவிலக்கு அமல்பிரிவு முதல் நிலைக் காவலர் திரு. மோகன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத்

துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான வாத்திய இசைக் காவலர் திரு. P.அசோக்குமார் மற்றும் சாலை விபத்தில் காலமான முதல் நிலைக் காவலர் திரு. J.மோகன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9